தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

ஆலோசனைச் சுற்றறிக்கை 2004/நூல/02(அ)(திருத்தம் 2026)

# உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்பான பொது நூலகங்களில் "ஒக்டோபர் - தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம்" இனை நடைமுறைப்படுத்தல்

## 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. அதன்படி, 2026 ஒக்டோபர் மாதத்தின் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்குமுகமாக **விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்** மற்றும் **செயற்திட்டங்களை** நடைமுறைப்படுத்துமாறு சகல உள்ளூராட்சி நிறுவன பொது நூலகங்களிடமும் வேண்டப்படுகின்றன. **"வாழ்நாள் முழுவதும் - எழுத்தே நண்பன்"** என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டின் தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

## 02. வாசிப்பு

"வாசிப்பு" என்பது பொதுவாக நூல்களை வாசித்தல் என்றே கருதப்படுகின்றது. ஆனால் வாசித்தல் என்பது ஒரு பரந்த அர்த்தத்தை தரக்கூடிய ஒரு செயன்முறையாகும். அதன் கீழ் தகவல் தேடல், அறிவு, பொழுதுபோக்கு, ஆய்வு நடவடிக்கைகளுக்காக புத்தகங்கள் போன்ற அச்சிடப்பட்ட சாதனங்கள் மூலம் வாசிப்பது என்பதுடன், இணையம், கட்புல செவிப்புல சாதனங்கள் ஊடாக வாசிப்பது ஆகியவையும் இதில் உள்ளடங்கும். திறந்த மனதுடன் நாடகமொன்றை இரசித்தல், இயற்கையை இரசித்தல் என்பனவும் கூட வாசிப்பேயாகும். வாசிப்பானது அறிவின் மூலம் மாத்திரமன்றி, கற்பனை சக்தி, புத்தாக்கம், மதிநுட்பம் போன்றவற்றின் அடிப்படையிலான உணர்வுபூர்வமான, இரசனைத்திறன் மிக்க மனிதர் சமூகமொன்றை உருவாக்குவதில் செலுத்திய பங்களிப்பு அளப்பரியது.

சில தசாப்த காலமாக தனி மனிதனாகவும், சமூகமாகவும் வாசிக்கும் பழக்கம் தூரமாகிக் கொண்டே வருகின்றது. ஏதோ ஒரு துறையிலிருந்து மனித வாழ்க்கைக்கு கிடைக்கின்ற பிரயோசனமான வாசிப்புக்குப் பதிலாக, நவீன தொலைத் தொடர்புத் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு காரணமாக மேமெழுந்தவாரியான வாசிப்பில் திளைத்திருத்தல் மட்டுமன்றி அடிமைப்படுதல் தற்கால சமூகத்தின் முன்னேற்றத்திற்கு தீய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. நாடு என்ற வகையில் பரிபூரண அபிவிருத்தி நோக்கி நகர்கின்ற பயணத்தில் அறிவுடைய, புத்திக்கூர்மையான, கலாசார பெறுமதி மிக்க சமூகமொன்றை கட்டியெழுப்பதற்காக வாசித்தல் என்பதை செயற்திறன் மிக்க வகையிலும் பிரயோசனம் வாய்ந்த வகையிலும் பயன்படுத்துவது அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## 03. செயற்திட்டக் குழு

இங்கு நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதற்காக பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசிய வாசிப்பு மாத செயற்திட்டக் குழுவொன்றை நியமிப்பது பொருத்தமானதாகும். ஏற்கனவே நூலகக் குழுவொன்று இருந்தால் இக்குழு மூலமாகவும் வாசகர் சமூகத்தின் பங்கேற்பின் மூலமும் இப் பணியைச் செய்ய முடியும். இதற்கான பிரதான வழிநடத்தல் குழுவொன்றை நியமிப்பதும் பொருத்தமானதும் மற்றும் அதன் அமைப்பு பின்வருமாறு அமைதல் வேண்டும்.

- நிறுவனத் தலைவர் / பிரதித் தலைவர் - குழுத்தலைவர்
- நகர சபை செயலாளர் அல்லது உள்ளூராட்சி நிறுவன செயலாளர் - துணைத் தலைவர்
- நூலகர் - குழுச் செயலாளர்

- சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர்
- உள்ளூராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட பொதுச் சுகாதார உத்தியோகத்தர்
- வாசகர் சமூகத்தின் செயற்பாடு மிக்க பிரதிநிதியொருவர்
- அருகாமையில் உள்ள பாடசாலையின் அதிபர்

04. செயற்படுத்தக் கூடிய திட்டங்கள்

வாசிப்பு மற்றும் அது தொடர்புடைய சேவைகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதே நூலகமொன்றின் பிரதான தொழிற்பாடாகும். அதன் கீழ் நூலகமொன்றினால் மேற்கொள்ளப்படும் தினசரிப் பணிகளுடனும், மேலதிகமாக பின்வரும் பணிகளை மேற்கொண்டவாறு மேற்கொள்வதற்கும் முன்மொழியப்படுகின்றது.

- வாசிப்பதற்கான ஒரு இணையதளப் பக்கத்தை உருவாக்குதல்.
- நூலகத்தின் முகநூல் பக்கம் (Face Book) மூலம் பல்வேறு வாசிப்பு ஊக்குவிப்பு திட்டங்களை விளம்பரப்படுத்துதல் மற்றும் பிரச்சாரம் செய்தல்.
- நூலகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய தகவல்களை மின்னணு மற்றும் அச்சிடப்பட்ட ஊடகங்கள் மூலம் பரப்புதல்.
- நூலகத்தினால் இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் வாசகர்களின் படைப்புகளைக் காட்சிப்படுத்தும் நூலக குழுக்களை அமைத்தல்.
- சிறுவர்கள், விசேட தேவையுடையவர்களுக்கான வாசிப்பு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல். சிறுவர், முதியோர் இல்லங்கள் மற்றும் சிறைச்சாலைகள் ஆகியவற்றுடன் இணைந்து நடமாடும் நூலக சேவையை ஏற்பாடு செய்தல்.
- அறிவு ஜீவிகள்/பல்வேறு துறைகளில் வெற்றி பெற்றவர்களின் வாசித்தல் தொடர்பான அனுபவங்களை சமூக ஊடகங்கள், மின்னணு ஊடகங்கள் மூலம் பரப்புதல்.
- இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி சரியான தகவல்களைத் தேடுவது குறித்து வாசகர்களை தெளிவூட்டும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
- அதிகார எல்லையிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் இல்ல நூலகங்களைத் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்.
- நூலகத்துடன் இதுவரை தொடர்பில்லாத வாசகர்களைக் கண்டறிந்து, அவர்களை இணைக்கும் திட்டங்களைச் செயல்படுத்துதலும், நூலக அங்கத்துவம் வழங்குதலும்.
- தகவல் கல்வியறிவு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
- நூலகங்களுக்கிடையேயான கூட்டுறவு நிகழ்ச்சிகள் மூலம் வாசிப்பை ஊக்குவித்தல்.
- மக்களுக்கான இரசனைத் திறன்மிக்க பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- மக்களுக்கான கதை சொல்லும் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தல் (Story Telling), பொழுதுபோக்கு சார்ந்த படைப்பாற்றல் நிகழ்ச்சிகளை நிகழ்த்தும் வளவாளர்களை இதற்காக ஈடுபடுத்தல்.
- இலக்கிய விருது பெற்ற நூல்களை தெரிவு செய்து அவற்றை மையமாக வைத்து திறந்த இரசனை நிகழ்ச்சிகள், விமர்சனப் போட்டிகள், திறந்த சித்திரப் போட்டிகள் என்பவற்றை ஏற்பாடு செய்தல்.
- "நூலிற்காக ஒரு நேரம்" வாசகருக்கு ஒரு நூலை வாசிக்க ஒரு குறிப்பிட்ட நாளையும் நேரத்தையும் வழங்குவதற்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல். பாடசாலை மட்டத்திலோ அல்லது வாசிப்புக் கழகங்கள் மூலமாகவோ அதைச் செயல்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளல்.
- வாசிப்பு முகாம்களை நடாத்துதல்.

- "வாசிப்போம் வெற்றி பெறுவோம்" என்ற கருப்பொருளின் கீழ் வினா விடை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
- பல்கலைக்கழக மாணவர்களை வாசிப்பு ஊக்குவிப்பு திட்டங்களில் இணைத்துக் கொள்ளல்.
- ஒரு குறித்த அதிகார எல்லைக்குட்பட்ட வகையில் சிறந்த வாசகரை தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சிகள் / போட்டிகளை ஏற்பாடு செய்தல்.
- நூலக சுவர் சஞ்சிகைகள், பத்திரிகைகள் மூலம் வாசகர்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்க வாய்ப்புக்களை வழங்குதல்.
- முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது தினசரி நூலகப் பாவனையை அதிகரித்தல்.
- வாசிப்பு/வாசிப்பை ஊக்குவித்தல் தொடர்பான குறும்படங்களை தயாரித்தல்.
- TikTok ஊடகத்தைப் பயன்படுத்தி வாசிப்பை ஊக்குவிக்கும் வீடியோக்களை உருவாக்குதல்.
- வாசிப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை முடிந்தவரை நிலைபேறா அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்த வகையில் அமைத்துக் கொள்ள முயற்சித்தல். (ஆண், பெண் பல்வேறு இனங்கள் பல்வயதுப் பிரிவினர்)
- நூலகம் மூலம் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளை ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தல். (செய்தித்தாள்கள், பிரதேச வானொலி சேவைகள் மற்றும் பிற ஊடகங்கள் மூலம்)
- பிற ஆக்கபூர்வமான வாசிப்பு ஊக்குவிப்புத் திட்டங்களை நடாத்துதல்.
- பொருத்தமான இதர நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

05. நிதி

இதற்காக அதிக நிதி முதலீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. நிதி ஒதுக்கீடு தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனம் மூலம் அல்லது நூலகம் மூலம் மேற்கொள்ளப்படலாம்.

06. அறிக்கை தயாரித்தல்

மேற்கொள்ளப்பட்ட சகல உள்ளூராட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான, முறையாக தயாரிக்கப்பட்ட அறிக்கையினை நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் **2027 பெப்ரவரி மாதம் 28ஆந் திகதியன்று** அல்லது அதற்கு முன்னர் **பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல. 14, சுதந்திர வழி, கொழும்பு 07** எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

வெற்றி பெறும் நூலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படையான அறிக்கையினைத் தயாரிக்கும் போது, மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்டத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் நடைமுறை பின்பற்றப்படும். மொத்த புள்ளிகளில் 75% நூலகம் நடாத்தும் வாசிப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளுக்காகவும், 25% புள்ளிகள் பிற சமூகம் சார் திட்டங்களுக்கும் வழங்கப்படும்.

அறிக்கையைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகத்தை கட்டுவதற்கான மேலதிக நேரத்தையும் பணத்தையும் செலவிடத் தேவையில்லை. நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை தனித்தனியான **புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய ஆதாரங்கள்/புள்ளிவிபரத் தரவுகள்** உள்ளடங்களாக முறையான வகையில் முன்வைத்தல் போதுமானதாகும்.

07. மதிப்பீடு

தேசிய வாசிப்பு மாதம் 2026 இல் வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித் திட்டங்களை முன்கொண்டு சென்ற நூலகங்களுக்கு 2027 ஆம் ஆண்டில் இடம்பெறும் தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது விருதுகளும் சான்றிதழும் வழங்கப்படும். மதிப்பீடானது நூலக மட்டத்தில் இடம்பெறுவதால் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ள பொது நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்கள் தனித்தனியாக அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். வெற்றி பெறும் நூலகங்களை தெரிவு செய்வது தொடர்பாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் முடிவு இறுதியானது.

கலாநிதி ரத்ன ஸ்ரீ விஜேசிங்க
தலைவர்

Dr. Rathna Sri Wijesinghe
Chairman
National Library and Documentation Services Board
No. 14, Independence Avenue,
Colombo 07.


தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 0112-688855
தொலைநகல் - 0112-685201
மின்னஞ்சல் - libdev@mail.natlib.lk
இணையத்தளம் - www.natlib.lk